**இலங்கை மின்சார சபை ஓய்வூதிய நிதியம் - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை மின்சார சபை ஓய்வூதிய நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நலன்களுக்கான தேறிய சொத்துக்கள் கூற்று , நலன்களுக்கான தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1321/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் 14(1) ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 **நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2003 திசெம்பர் 31 ஆம் திகதிய 1321/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஓய்வூதிய நிதியப் பிரமாணங்கள் | | | |
| (அ) 18 ஆம் விதி | (i)தொழில் ஆணையாளர் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்படாமல் 2015 ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் முறையே 15 சதவீதம் மற்றும் 10 சதவீதத்தால் நிதியம் ஓய்வூதியத் தொகையை அதிகரித்திருந்த துடன் 2022 நவம்பர் 04 வரையில் | வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடுவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்ட திருத்த விதிகள் 23.2,23.3 மற்றும் 23.4 இன் பிரகாரம் 2015 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அதிகரிக்கப்பட்ட ஓய்வூதிய கொடுப்பனவுகள் இலங்கை மின்சார சபையின் சபையால் அங்கீகரிக்கப்பட்டது. . அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின்படி, 2022 யூன் 22, அன்று, திருத்தப்பட்ட விதிகளின் சட்ட வரைவு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுவதற்காக | ஓய்வூதிய நிதியப் பிரமாணங்களுடன் இணங்க வேண்டும், திருத்தங்களுக்கு முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டியதுடன் மற்றும் ஓய்வூதிய நிதிய விதிகளை சட்டப்பூர்வமாக்கு வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திருத்தங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வில்லை. | கௌரவ அமைச்சரின் பரிந்துரைக்காக மீண்டும் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| | (ii)தொழில் ஆணையாளர் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்படாமல் 2022 ஆம் ஆண்டில் 2021 சனவரி 01 முதல் அமுலுக்கு வரும் வகையில், குறைந்தபட்ச அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த ஓய்வூதியத் தொகையை ரூபா 10,000 இலிருந்து ரூபா 15,000 ஆக உயர்த்தியது மற்றும் மீளாய்வாண்டில் 2020 திசெம்பர் 31 அல்லது அதற்கு முன் ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு 10 சதவீதத்தால் ஓய்வூதியத்தை அதிகரித்துள்ளதுடன் 2022 நவம்பர் 04 வரையில் திருத்தங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வில்லை. | 2022 சனவரி 28 ஆம் திகதிய சபைத் தீர்மானத்தின் தீர்மான இலக்கம் 22.04.46 இன் பிரகாரம் 10% ஓய்வூதிய கொடுப்பனவு அதிகரிப்பு சபையால் அங்கீகரிக்கப்பட்டது.<br><br>2021 செப்டெம்பர் 28 ஆம் திகதிய சபைத் தீர்மானத்தின் தீர்மான இலக்கம் 21.16.301 இன் பிரகாரம் 10% குறைந்தபட்ச அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவு அதிகரிப்பு சபையால் அங்கீகரிக்கப்பட்டது. | திருத்தங்களுக்கு முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டியதுடன் மற்றும் ஓய்வூதிய நிதிய விதிகளை சட்டப்பூர்வமாக்கு வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். |
| (ஆ) 23.2 ஆம் விதி | நிதியத்திலிருந்து கொடுப்பனவுகள் வழங்கப்பட முடியாத போதிலும், 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் மூலம், ரூபா 123..5 மில்லியன், ரூபா 132.7 மில்லியன், ரூபா 142 மில்லியன மற்றும் ரூபா 150.7 மில்லியன் ஆனது | 2003 திசெம்பர் 31 ஆம் திகதிய 1321/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 23.1 மற்றும் 23.2 விதி மறுசீரமைப்பின் கீழ் 2013-10-23 ஆம் திகதி அதில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் ஓய்வூதிய நிதியத்தின் பொறுப்பாளராக இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட இமிச ஓய்வூதிய நிதியத்தின் 23.2, 23.3 மற்றும் 23.4 ஆம் | ஓய்வூதிய நிதியப் பிரமாணங்களுடன் இணங்க வேண்டியதுடன் வர்த்தமானி அறிவித்தலைப் பிரசுரிப்பதன் மூலம் திருத்தங்களை சட்டப்பூர்வமாக்க வேண்டும |

| | |
|---|---|
| தொழில் ஆணையாளர் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் மருத்துவ கொடுப்பனவுகளாக செலுத்தப்படடிருந்தது. | திருத்தப்பட்ட விதிகளின் அடிப்படையில் 2018,2019,2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் இமிச ஓய்வூதிய நிதியத்திலிருந்து ஓய்வுபெற்ற ஓய்வூதியர்களுக்கு மருத்துவ கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. திருத்தங்களை வர்த்தமானியில் வெளியிடுவதற்காக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் காணப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் வரிக்குப் பின்னரான நிதியத்தின் தேறிய அதிகரிப்பு ரூபா 1,079 மில்லியன் ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் வரிக்குப் பின்னரான நிதியத்தின் தேறிய அதிகரிப்பு ரூபா 1,246 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 167 மில்லியன் ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் ஓய்வூதியக் கொடுப்பனவு அதிகரித்தமை மற்றும் வட்டி வருமானம் குறைவடைந்தமை இப்பின்னடைவிற்கு காரணங்களாக இருந்தன

2021 திசெம்பர் 31 இல் எதிர்காலப் பொறுப்பான ரூபா 39,248 மில்லியனைத் தீர்ப்பது தொடர்பாக, முந்தைய ஆண்டு பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 11.08 சதவீத அதிகரிப்பைக் காட்டி ரூபா 14,226 மில்லியன் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. மேலும், ஓய்வூதிய விதிகளில் உள்ள ஏற்பாடுகளுக்கு மாறாக 2021 ஆம் ஆண்டில் சம்பள மட்டத்தை அதிகரித்தமை மற்றும் மருத்துவ கொடுப்பனவை அறிமுகப்படுத்தியமை போன்ற ஓய்வூதிய பலன்களை அதிகரித்தமை இப் பற்றாக்குறைக்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், மேற்படி பற்றாக்குறை இலங்கை மின்சார சபையிடமிருந்து பெற வேண்டியவையாக கணக்கீடு செய்யப்பட்டமையால் ஓய்வூதிய நிதியானது அதன் தேறிய சொத்துக்களை உயர்த்தியுள்ளது.

### 2.2. பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப்பகுப்பாய்வு

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டின் முக்கிய வருமானம் மற்றும் செலவினங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவின் சதவீதத்துடன் பின்வருமாறு.

| **வருமானம்/செலவு** | **2021** | **2020** | **அதிகரிப்பு / (குறைவு)** | **சதவீதம் %** |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| முதலீட்டு வருமானம் | 1,688,122,252 | 2,212,307,093 | (524,184,841) | (23.69) |
| ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்ட நலன்கள் | 3,001,802,123 | 2,670,843,390 | 330,958,733 | 12.39 |